இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 341 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 06 – புதன்கிழமை 22 ஜுலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 341 : Thiruvalluvar Year - 2057 - Aadi 06 - Wednesday 22 July 2026 - Dak 8 Pages ₹ 5.00

### மேகதாது விவகாரம் – டெல்லியில் மாணவர்கள் மீது தாக்குதல்:

## நாடாளுமன்ற இரு அவைகளும் 2வது நாளாக முடக்கம்!

### தி.மு.க. – எதிர்க்கட்சிகள் கண்டன முழக்கம்!

புதுடெல்லி, ஜுலை 22 –

மேகதாது விவகாரம் மற்றும் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மீதான தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் நாடாளுமன்ற இரு அவைகளும் 2வது நாளாக இன்றும் முடங்கின. தொடங்கிய சில நிமிடங்களிலேயே இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.



மேகதாது பிரச்சினை குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று இரு அவைகளிலும் 2வது நாளாக திமுக இன்றும் நோட்டீஸ் அளித்தது. மக்களவையில் திமுக குழு தலைவர் டி.ஆர்.பாலுவும், மாநிலங்களவையில் திமுக குழு தலைவர் திருச்சி சிவாவும் நோட்டீஸ் அளித்தனர்.

மேகதாது விவகாரத்தில் தமிழ்நாட்டு விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்டிட நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்றும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்குரிய காவிரி நீரை எவ்வித தாமதமும் இன்றி கர்நாடக அரசு திறந்து விடுவதை ஒன்றிய அரசு உறுதி செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதேபோல், டெல்லியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மீதான காவல்துறையின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து விவாதம் நடத்த அனுமதி அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால் இதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இதனை கண்டித்து திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் முழக்கங்களை எழுப்பினர். இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை, முதலில் நண்பகல் 12 மணி வரையும், பின்னர் பிற்பகல் 2 மணி வரையும் ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை**

இதேபோல், மாநிலங்களவையிலும் மேகதாது பிரச்சினை மற்றும் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மீதான் தாக்குதல் விவகாரங்கள் எதிரொலித்தன.

நீட் தேர்வு முறைகேடுகள், அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேடு தொடர்பாகவும் விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். இதனை ஏற்க அவைத் தலைவர் மறுத்துவிட்டார். இதனால், அவையில் தொடர்ந்து அமைதியற்ற சூழல் நிலவியது. இதனைத் தொடர்ந்து மாநிலங்களவையும் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடியபோதும் அமளி நீடித்ததால் ஒத்திவைக்கப்பட்டது.

### கைது நடவடிக்கை: முதல்வர் தலையில் நங்கு நங்கென்று குட்டிய ‘தி இந்து’ தலையங்கம்!

# அரசின் ஆணவத்துக்கு மக்களே சரியான பாடம் புகட்டுவர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜுலை 22-**

**‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் தலையங்கத்தைச் சுட்டிக்காட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள தமது சமூக வலைதளப் பதிவில், “ஆட்சிக்கு எதிரான விமர்சனங்களை எல்லாம் கிரிமினல் சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தி அடக்கிடப் பார்க்கும் த.வெ.க. அரசின் போக்கை கடுமையாக சாடி, முதல்வர் தலையில் நங்கு நங்கென்று குட்டியிருக்கிறது” என்றும் “த.வெ.க. அரசின் ஆணவத்துக்கு மக்களே சரியான பாடம் புகட்டுவர்” என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

‘தி இந்து’ நாளேட்டில் வெளியான தலையங்கத்தின் முக்கிய அம்சம் வருமாறு:-

ஆட்சிக்கு வந்தவுடன் தங்களின் நற்பெயரைக் காத்துக் கொள்ள காவல்துறை மற்றும் குற்றவியல் சட்டங்களையும் கவசமாக பயன்படுத்துவதை இயல்பான நடைமுறையாக மாற்றிவிட்டனர். இது ஜனநாயகத்தில் பெரும் ஆபத்தையே உருவாக்குகிறது.



காவல் துறை நடவடிக்கைகள், கைது நடவடிக்கைகளை பார்க்கும் போது, த.வெ.க. ஆட்சியில் சர்வாதிகாரப்போக்கு உருவாவதை காண முடிகிறது.

த.வெ.க. ஆட்சிக்கு வந்தவுடனேயே முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை விமர்சனம் செய்ததாக 10 பேர் மீது காவல் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

த.வெ.க.வினருக்கு ஆதரவாகவே காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. த.வெ.க. வினருக்கு ஆதரவாகவே காவல் துறை செயல்பட்டு வருவதை தற்போதைய நடவடிக்கைகள் மூலம் காண முடிகிறது.

இவ்வாறு த.வெ.க. அரசை கடுமையாக விமர்சித்து ‘தி இந்து’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

இதை மேற்கோள் காட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**ஆட்சிக்கு எதிரான விமர்சனங்களை எல்லாம் கிரிமினல் சட்டப்பிரிவுகளைப் பயன்படுத்தி அடக்கிடப் பார்க்கும் த.வெ.க. அரசின் போக்கைக் கடுமையாகச் சாடியுள்ளது The_Hindu நாளேட்டின் இன்றைய தலையங்கம்.**

**நம் முதலமைச்சருக்குப் புரிவது போல சொல்லவேண்டுமென்றால், இந்தியா முழுவதும் வெளியாகும் பத்திரிகையின் நடுப்பக்கம் அவரது தலையில் நங்கு நங்கென்று குட்டியிருக்கிறது.**

**ஆட்சியின் அலங்கோலங்களை எல்லாம் கைது நடவடிக்கைகளால் சரிக்கட்டி விடலாம் என்று இந்த அரசு எண்ணினால் மக்களே அந்த ஆணவத்துக்குச் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்து பதிவிட்டுள்ளார்.

### எதிர்ப்புக்குரலை ஒடுக்க அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதா?

# சர்வாதிகாரப் போக்கில் ஜோசப் விஜய் ஆட்சி!

## ‘தி இந்து’ நாளேடு தலையங்கத்தில் கடும் கண்டனம்!

**சென்னை, ஜுலை 22-**

**“எதிர்ப்புக்குரலை ஒடுக்க அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது சர்வாதிகாரப் போக்கில் ஜோசப் விஜய் ஆட்சி சென்று கொண்டிருப்பதைக் காட்டுகிறது” என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கத்தில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

‘எதிர்ப்புக் குரலுக்கு இடமளிப்பது’ என்ற தலைப்பிலும் ‘ஆட்சியாளர்களின் நற்பெயரைக் காக்க குற்றவியல் சட்டத்தைப் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது’ என்ற துணைத் தலைப்பிலும் ‘இந்து’ நாளேட்டில் வெளியான தலையங்கம் வருமாறு:-

ஜனநாயக மனப்பான்மையின் மையத்தில் இருப்பது, கருத்து வேறுபாடுகளை சகித்துக்கொள்வதும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதும்தான். இவற்றுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே சீர்குலைத்து விடும்.

தமிழக வெற்றிக் கழகம் (TVK) தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் சில மாதங்களிலேயே, முதலமைச்சர் அல்லது அவரது அமைச்சரவை சகாக்களை விமர்சித்ததன் காரணமாக குறைந்தது 10 பேர் காவல்துறை நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் முதலமைச்சர் சி.ஜோசப் விஜயை விமர்சித்ததற்காக கைது செய்யப்பட்ட சம்பவம் அதிக கவனத்தைப் பெற்றிருந்தாலும், அதே காலகட்டத்தில் பலரும் கைது செய்யப்பட்டனர் அல்லது காவல்துறை நடவடிக்கைகளை எதிர்கொண்டுள்ளனர்.

அவர்களில், திருநெல்வேலியைச் சேர்ந்த ஜேம்ஸ் ராஜா, கோயம்புத்தூரைச் சேர்ந்த வி. விஷ்ணுபிரபு மற்றும் டி. மனோஜ்குமார் ஆகியோர், முதலமைச்சரை விமர்சித்து முகநூலில் (ஃபேஸ்புக்கில்) பதிவிட்டதற்காக நடவடிக்கைக்கு ஆளானார்கள். கரூரைச் சேர்ந்த தங்கமணியும் இதேபோன்ற நடவடிக்கையை எதிர்கொண்டார்.



THE HINDU

Allowing dissent

Using criminal law to protect reputation of rulers is condemnable

At the heart of democratic disposition is tolerance of dissent and upholding of the rule of law; threats to these can undo the knit of a democracy. In the first couple of months of the Tamilaga Vettri Kazhagam (TVK)'s rule in Tamil Nadu, at least 10 people have been subject to police action, on account of speaking against the Chief Minister or his cabinet colleagues. While the case of former Minister Anitha Radhakrishnan's arrest for criticising Chief Minister C. Joseph Vijay gained the spotlight, there were several others who were arrested or faced police action over the course of this period. This includes James Raja of Tirunelveli; V. Vishnuprab-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) Gen Z அணித் தலைவர் அ. அன்பானந்தம், முதலமைச்சர் விஜய் மற்றும் அவரது குடும்பம் குறித்து “இழிவான” பதிவுகளை வெளியிட்டதாகக் கூறி, அவரது இல்லத்தில் காவல்துறையினர் சோதனை நடத்தினர்.

யூடியூபர் மாரிதாஸ், முதலமைச்சர் மற்றும் தொழில்துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா குறித்து கூறிய கருத்துகளுக்காக சென்னை சைபர் கிரைம் காவல்துறையால் கைது செய்யப்பட்டார்.

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், முதலமைச்சருக்கு மிரட்டல் விடுத்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் தூத்துக்குடியில் கைது செய்யப்பட்டார்.

மேலும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ். ரமேஷ் குறித்து கருத்து தெரிவித்த வினோத் சூர்யகுமார், டி.வி.கே.வை ஆதரித்த ஒரு பெண்ணை இலக்காகக் கொண்டு இன்ஸ்டாகிராமில் பதிவிட்டதற்காக காவல்துறையால் கைது செய்யப்பட்ட ஆர்.ஜே. சரண் ஜெயராமன், ஆகியோரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

அதேபோல், அமைச்சர் எஸ். ரமேஷ் குறித்து கருத்து தெரிவித்த இந்திராணி சுடலைமுத்து மீதும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

**ஆபத்தை உருவாக்கும்!**

அனைத்து அரசியல் தரப்பினரும் ஆட்சிக்கு வந்தவுடன், தங்களின் நற்பெயரைக் காக்க காவல் துறையையும் குற்றவியல் சட்டங்களையும் ஒரு கவசமாகப் பயன்படுத்துவதை இயல்பான நடைமுறையாக மாற்றிவிட்டனர். இது ஜனநாயகத்திற்கு கட்டமைப்பு ரீதியான ஆபத்தை உருவாக்குகிறது.

காவல்துறையின் நடவடிக்கைகள், கருத்து வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கைது நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையும், த.வெ.க. ஆட்சியில் சர்வாதிகாரப் போக்கு உருவாகி வருவதையும் சுட்டிக்காட்டுகின்றன. அரசில் இருப்பவர்களையோ அல்லது ஆளும் கட்சியையோ விமர்சிக்கும் எந்தக் கருத்துக்கும் எதிராக, அவதூறு சட்டம், தகவல் தொழில்நுட்பச் சட்டம் மற்றும் இணையக் குற்றப் பிரிவுகள் விருப்பம்போல் பயன்படுத்தப்படுகின்றன.

த.வெ.க. கட்சியினரால் அளிக்கப்படும் புகார்களும், கருத்து வேறுபாடு கொண்டவர்களை குறிவைத்து காவல்துறை தாமாகவே (suo motu) எடுக்கும் நடவடிக்கைகளும், நிர்வாகத்தை அதன் சரியான பாதையிலிருந்து விலக்கக்கூடும்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

